SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 6. TML1145 - பாரதிதாசன் கவிதைகளில் பெண் படைப்பாளரான பாமாவின் கருக்கு புதினம்

ரா.சந்தியா
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி. பல்கலைக்கழகம்,
வேலூர் 632014

முனைவர் அ.மரிய செபஸ்தியான்
உதவிப் பேராசிரியர்
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி. பல்கலைக்கழகம்
வேலூர் 632014


## ஆய்வு சுருக்கம்

*பெண்ணியம், ஒரு தத்துவமாகவும் சமூக இயக்கமாகவும், பல நூற்றாண்டுகளாக மனித சமூகத்தில் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. பெண்களின் உரிமைகள், சமத்துவம், மற்றும் சமூக நீதி ஆகியவற்றை வலியுறுத்தும் பெண்ணியம், பல்வேறு காலகட்டங்களிலும், கலாச்சாரங்களிலும் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. சமூகத்தில் நிலவும் சாதிய, பாலின பாகுபாடுகளை எதிர்த்து, தலித் பெண்களின் வாழ்வியலை மையப்படுத்தி, அவர்களின் குரலாக ஒலிக்கும் படைப்பாளர்களைப் பற்றி பேசும் கட்டுரை இது. பாமா, சிவகாமி, ஆகிய இரண்டு தலித் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள், தலித் பெண்ணியத்தை வலுப்படுத்தும் விதமாகவும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் அமைந்துள்ளன. கல்வி, வாய்ப்புகள், பொருளாதார வர்க்கம், தலைமுறை ஆகியவை வெவ்வேறு வகையான பெண்ணியங்களை உருவமைக்கின்றன. என்று ஸ்ட்பன் ஹாட்ஜ்ஸன் ரைட் எடுத்துரைக்கின்றார். இன் நிலையில் தொடக்க காலப் பெண்ணிய ("1550–1700) காலகட்டத்தில் பெண்களின் வாழ்வு நிலையில் சட்ட ரீதியான முன்னேற்றம் ஏதுமில்லை."1 என்றும், ஆனால் இன்றைய நிலையில் பெண்களுக்கு சட்ட ரீதியாக முன்னுரிமை இருந்தாலும் பெண்களுக்கு முழு உரிமை கிடைக்கவில்லை என்பதையும் அவர் குறிப்பிடுகிறார். எனவே பெண்ணியம் என்பது இச்சமூகத்தில் எல்லா சிக்கல்களையும் புரிந்துகொண்டு அதனை மையப்படுத்தும் இயக்கமாக அமைகிறது, மேலும், சார்லட்பன்ஸ் என்பவர் "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல இச்சமுகத்தை மாற்றி அமைக்க முடியும் என்று கூறியுள்ளார்."2 இத்தனை கருத்தாக்காங்களை முன்வைத்து, இக்கால பெண்ணிய எழுத்தாளர் பாமா அவர்களின் முதன்மை படைப்பாக விளங்ககூடிய 'கருக்கு" நாவலை முதன்மை படைப்பாக கொண்டு, 20 –ம் நூற்றாண்டில் பாரதிக்கு அடுத்த நிலையில் பெண்களின் முழு உரிமைப் பெற தமது பாடல்களின் மூலம் விழிப்புணர்வு ஏற்கடுத்திய பாரதிதாசன் அவர்களின், பெண் உரிமை கவிதைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகிறது.*



## திறவுசொற்கள்

*பாரதிதாசன், பாமா, பெண்ணியம், கல்வி, பெண்ணியம் வகைபாடுகள்.*


## பெண்ணியம் பெயர் காரணம்

*பெண்ணியம் என்ற சொல்* "Feminism" *என்ற சொல்லின் தமிழாக்கம் ஆகும்.* "Feminism" *என்ற ஆங்கிலச் சொல் "பெமினா"* (Femina) *என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது.பெண்ணின் தாழ்வுற்ற நிலையை மாற்ற முயலும் அனைத்துப் போராட்ட முறைகளையும் உள்ளடக்கியது.3* "Feminism" *என்ற இச்சொல் தமிழில் பெண்ணிலைவாதம், பெண்நிலை, பெண்ணியத்தின் நலக்கொள்கை போன்ற சொற்களால் அழைக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் உள்ள பெண்ணியவாதிகளின் பெண்னியத்துவம் என்பது கலாச்சார, இனசமூகம், மத போன்றவற்றை எல்லாம் கீழமை அடிப்படை இயக்கமாக அமைகின்றது.*

## பெண்ணிய படைப்பாளர்களின் வெளிப்படுத்தும் பொதுவான கருத்துக்கள்

- *பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலை நாட்டுதல்.*

- *பெண்களுக்குப் ஒருங்கணைத்து, இயக்கமாக்கி அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராட்டம் செய்து பெண்கருக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.*
- *இருபாலினத்தரும் ஆண், பெண் சமத்துவ உரிமைகளை ஒருங்கிணைத்து நிலை நாட்டுதல்.*
- *பெண்ணியம் என்றால் அனைத்து வகையான பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும்.*
- *பெண்களின் மீதான. பாலியால் துன்பங்களும் ஒடுக்குமுறைகளும் ஆய்ந்து அவற்றைப் சரிசெய்வதர்க்கான விடுதலைப் மற்றும் தீர்வுகள் பெறுவதற்கான வழிமுளைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.*
- *மனித சமூகத்தில், பெண்ணுக்கு, 'மனித மதிப்பு கிடைக்கப் பாடுபடுவது.*
- *பெண்ணின் முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும் செயல்பாடுகள் அனைத்தையும் குறிக்கிறது.*
- *பெண் என்பதால் ஒருவர் எதிர்கொள்ளநேரும் துயரம் களையப் பாடுபடுவது. வாழ்வின் எல்லாத் தளங்களிலும் ஆண் –பெண் இருபாலரும் சமமானவர்களே என்ற சமத்துவக் கருத்தைப் பெண்ணியம் முன்னிறுத்துகிறது.4*

*எனவே பெண்ணியம்மானது இதுபோன்று பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.*

**ஆண், பெண் இனம் வேறுப்பாடுகள்**


*பெண்ணுக்குரியன என்று தனித்தனியே வரையறுத்த பாலின அடிப்படையில் ஆணினம் பெண்ணினம் என்று எதிர் எதிர் போக்கினராக உருவாக்கி ஏற்றமிகு நிலையிலும் அடைக்கிச் சேவகம் செய்பவராக்கும் நிலையை பெண்ணியம் முனைகிறது. ஆண், பெண் இனம் வேறுப்பாடுகள் அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.*

**அட்டவணை 1**

| பெண் இனம் | ஆண் இனம் |
|---|---|
| சார்ந்து வாழும் நிலை | குடும்பத்தில் தலைமைப் பொறுப்பு |
| சமூகத்தில் இரண்டாம் இடம் | சமூகத்தில் முதல் இடம் |
| பணிவு | துணிவு |
| அச்சம் எதிர்பார்க்கப்படுதல் | வீரம் எதிர்பார்க்கப்படுதல் |
| குடும்பத்தில் செயல்படுதல் | வெளியுலகில் செயல்படுதல் |
| பணிந்து நடப்பவர் | முடிவெடுப்பவர் |
| கட்டுப்படுபவர் | தீர்மானிப்பவர் |

*அரசியல் இயக்கங்களிலும் இலக்கிய இயக்கங்களிலும் தமிழ் சூழலில் உருவாகின்றன. தமிழ் சூழலின் பெண்ணிய வகைப்பாடுகளும் மற்றும் இன்றைய தமிழ் பெண் எழுத்தாளர்கள் அட்டவணை 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.*

**அட்டவணை 2**




**பாரதிதாசனின் பார்வையில் பெண்ணி கல்வி**

*சமுதாய முன்னேற்றத்திற்குப் பெண் முன்னேற்றம் இன்றியமையாதது என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்து. குடும்ப விளக்கில் ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும் என்பதையும், இருண்ட வீட்டில் ஒரு பெண் எப்படி இருக்கக்கூடாது என்பதையும் மிகவும் அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றார். அதற்கான வரிகள் பின் வருமாறு கூறுப்பிடுகின்றார்.*

“”படியாத பெண்ணினால் தீமை! – என்ன
பயன் விளைப்பாள் அந்த ஊமை?
நெடுந்தமிழ் நாடெனும் செல்வி – நல்ல
நிலை காண வைத்திடும், பெண்களின் கல்வி” 5

*கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம் என்றும், கல்வி கற்ற பெண்கள் திருந்திய கழனி என்றும் பாரதிதாசன் கூறுகின்றார், இந்த கருத்தினை பாமா அவர்கள் பெண்கள் கல்வி கற்பதற்கு மிகவும் கடிணமான சூழல் உள்ளது என்பதனை தம்முடைய கருக்கு நாவலில் கூறுகிறார். தலித் குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படுவது, அவர்கள் சமூகத்தில் முன்னேற முடியாமல் தடுக்கப்படுவது போன்ற சிக்கல்களை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது. எழுத்தாளர் மரியாள் அண்ணன் வெளியூர் போய் படிச்சிட்டு விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தால் பக்கத்து ஊரில் உள்ள நூலகத்திற்கு போய் புத்தகங்கள் எடுத்து வாசிக்க பழக்கம் உண்டு. அப்பொழுது அங்கு கம்மாங்கார வேலை நடந்து சென்று கொண்டிருக்கும்போது பின்னே வந்துள்ள உயர்சாதினர், அவரைப் பார்த்து யாரு தம்பி நீ என்று கேட்டார்? தம்பி உனக்கு எந்த தேர்வு என்று அவர்கள் கேட்டார்கள். மரியாள் அண்ணன் நான் சேதி தெரு பறையனும் பட்டுனு மூஞ்சில அடிச்சது போல் சொல்லிவிட்டார். இதையெல்லாம் பார்த்த புரிந்து கொண்ட பாமாவின் அண்ணன் அவரிடம் பின்வருமாறு கூறுகிறார் “அண்ணன் எங்கிட்ட சொல்லும்போது கூடவே இந்த பறச்சாதியில் நாம் பொறந்திட்டதினாலே, நமக்குன்னு மதிப்போ, மரியாதையோ, கௌரவமே இல்லாம போச்சு. ஆனா நாம நல்லா படிச்சு முன்னுக்கு வந்தோம்னா, இந்த அசிங்கமெல்லாம் இல்லன்னு ஆக்கிப்போடலாம். அதுனாலே கருத்தா, கவனமா படிச்சிரு. படிப்பிலே மொதல்பிள்ளன்னா, எல்லாருமே ஒங்கிட்ட படிப்புக்காக ஒட்டிக்க பாப்பாக. அதனால கஷ்டப்பட்டு படிச்சிக்கிடனும் அப்படீன்னு*

*சொன்னாங்க. இது என் மனசிலே ரொம்ப ஆழமாப் பதிஞ்சுபோச்சு. அதனால முழு மூச்சா வெறித்தனமா படிச்சேன். அண்ணன் சொன்னது போல, வகுப்புல முதல் ஆளா நின்னேன், அதனாலயே நான் பறைச்சினாக்கூட நிறையப்பேரு எங்கிட்ட சிநேகிதம் பண்ணிக்கிட்டாங்க"6 எனவே தலித் பெண்கள் கல்வி கற்று முன்னேற சமூகத்தில் உள்ள தடைகளை எல்லாம் தாண்டி கல்வி கற்று தன் சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் சேவை செய்து அவற்றின் அனுபவங்களை கூறும் இடங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இந்த நாவல் உள்ளது,*

*பெண் அடிமைத்தனம் மறுப்புகள் "தமிழ்ச் சூழலில் பெண் விடுதலை, பெண் உரிமைகள், பெண் சமத்துவம் பற்றி விரிவாகச் சிந்தித்து கவிதைகளிலும், கட்டுரைகளிலும் எழுதிய மகாகவி பாரதி மிதவாதப் பெண்ணியவாதி ஆவார்."7 இவற்றில் பெண்களுக்கு உரிய குணநலன்கள் என்று நம் முன்னோர்கள் கூறிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவை நான்கும் பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. இவற்றையெல்லாம் உடைக்க வேண்டும் என்று பின்வரும் கவிதையின் மூலம் பெண்களின் நிலையை பாரதிதாசன் கருதுகிறார்.*

''அச்சம் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்
உச்சி இருட்டினில் பேய் வந்ததாக
உளறினால் அச்சமா**?** பேய் என்பதுண்டா**.**''        8

*கவிஞர் பாரதிதாசன் சுட்டிக்காட்டியது போல் சமூகத்தில் பெண்கள் பல்வேறு பாலின நெறிகளால் தொடர்ச்சியான போராட்டங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொள்கிறார்கள். இருப்பினும், இந்த சமூகத் தடைகளைத் தகர்த்தெறிய பெண்களுக்கு கல்வி மிகவும் முக்கியமானது என்பதை இந்த வரைப்படம் மூலம் தெரிவிக்கிறது.*

**பாரதிதாசனின் பார்வையில் சாதிய பாகுப்பாடு**

*பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கவிஞர். அவர் கவிதைகள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்னிறுத்துபவை. சாதியம், பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை சாதிய அவர், சமூக சமத்துவத்தை வலியுறுத்தினார். இதனை திருவள்ளுவர் பொறுப்பாவில்*

''பிறப்பெங்கும் எல்லா உயிருக்கும் சிறப்பொவ்வா
செய்தொரில் வேற்றுமையான்''        (குறல் 972) 9

*என்ற குரலில் கூறுகிறார். எனவே தாழ்த்தப்பட்டோர் சமத்துவம் என்ற நூலில் பாடலில் தீண்டாமையால் ஏற்படும் கொடுமைகளிலும் சாதி மறுக்கப்படும் பின் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை பாரதிதாசன் கூறியுள்ளார். சமூக சீர்திருத்தக் கவிஞராக அறியப்படும் பாரதிதாசன், சாதிய ஏற்றத்தாழ்வுகளை தனது கவிதைகளில் கடுமையாக விமர்சித்துள்ளார். அதேபோல், தலித் எழுத்தாளர் பாமா தனது "கருக்கு" நாவலில் சாதிய பாகுபாடுகளின் கொடூரங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். இருவரின் படைப்புகளிலும் சாதியம் குறித்த பார்வையை மூலம், சாதியத்தின் கோர முகம் குறித்த ஆழமான புரிதலை பெற முடியும். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் 1936 இல் தாழ்த்தப்பட்டோர் சமத்துவ பாடல் என்ற நூலை எழுதியுள்ளார் சாதி பிரிவினை என்பது மக்களுக்குள் ஏற்படுத்துவதற்கான முதல் கருவியாக இருக்கிறது. மனித குருதியில் பழக்கப்பட்டு இருக்கும் நஞ்சு இயற்கையால் எவரும் உயர்ந்தவர் அல்லர். என்றும்*

சேரிப் பறையர் என்றும்
தீண்டார் என்றும் சொல்லும்
வீரர் நம் உற்றாரடி – சகியே
வீரர் நம் உற்றாரடி**!**        10

*பாரதிதாசன் தலித் மக்களின் துயரங்களை தனது கவிதைகளில் பதிவு செய்தார். அவர்கள் சாதியின் பெயரால் அனுபவிக்கும் கஷ்டங்களையும், அவமானங்களையும் அவர் வெளிப்படுத்தினார். தலித் மக்களுக்குச் சமூகத்தில் சம உரிமை கிடைக்கப் போராட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார். சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கவிதைகளாக வடித்த பாவேந்தர் பாரதிதாசன் சாதியம் குறித்து கொண்டிருந்த எண்ணங்களையும், அதனை அவர் மேலே உள்ள கவிதை வரிகள் மூலம் சாதி பாகுபாடுகளை எதிர்த்து சமூக சமத்துவத்தை வலியுறுத்தினார். எனவே கருக்கு நாவலில் உள்ள கதாபாத்திரமான மரியாள் கன்னியாஸ்திரியாக இருந்தபோதும் சாதிய பாகுபாட்டை உணர்கிறாள். இதனால், அவள் தனது அடையாளத்தை மீட்டெடுக்கவும், சாதிக்கு எதிராகப் போராடவும் முடிவு செய்கிறாள். எனவே பாரதிதாசன் பெண்களைச் சமமாக நடத்த வேண்டும் என்றார். பாமாவும் பெண்களுக்கு எதிரான சாதிய ஒடுக்குமுறையைத் தனது நாவலில் விவரித்தார்.*

''வாழ்க்கையின் பல்வேறு தருணங்களில்,

பனங்கருக்குக் கூர்மையாய் என்னை அறுத்து,
ஆறாத ரணங்களை ஏற்படுத்திய நிகழ்வுகளும்,
சமூகத்தின் கட்டமைப்புகள்,
அறியாமையில் ஆழ்த்தி, செயல்படவிடாமல் முடக்கி,
மூச்சுத் திணறடிக்கும் அளவுக்கு என்னை
அழுத்திய கொடுமைகளும் ஏராளம்.
இத்தகைய தடைகளைத் தகர்த்து,
சமூகக் கொடுமைகளை அறவே ஒழித்து,
விடுதலைக் காற்றை சுவாசிக்க வேண்டும்
என்ற சுதந்திர வேட்கை என் உள்ளத்தில் சுனாமியாக எழுந்தது.
ஆனால், அந்த முயற்சிகள் சிதைக்கப்பட்டு,
நான் சின்னாபின்னமாக்கப்பட்ட
சந்தர்ப்பங்களில், என் மனதிற்குள் கொதித்தெழுந்த ரத்த
வெள்ளம் போலப் பெருகிய வேதனைகளின்,'' 11

*தொகுப்பே கருக்கு புதினத்தின் முன்னுரையில் பாமா கூறுகிறார். எனவே பாவேந்தரின் கவிதைகளும், பாமாவின் கருக்கு நாவலும் சாதிய எதிர்ப்புச் சிந்தனைகளைத் தூண்டி, சமூக மாற்றத்திற்கான உந்துதலாக இருக்கின்றன.*

**முடிவுரை**

*இப்படைப்பாளர்களின் நிலைகளில் இச்சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்ற ஒரு நிலை இருக்கக்கூடாது என்பதை இக்கட்டுரையாகும் படைப்பாளர்கள் தன் படைப்புகள் மூலம் சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகளையும் அதில் உள்ள சிக்கல்களையும் அந்த சிக்கலை எதிர்கொள்ளும் பெண்களின் நிலையும் வெளிக்கொணர முடியும் என்று கருதுகின்றனர். இதில் சமூகத்தில் இருக்கும் பெண்கள் கல்வி, அறிவு பெற்றால் மட்டுமே சுய சிந்தனைகள் வெளி கொணர முடியும் என்று கருதுகின்றார்கள் எனவே இச்சமூகத்தில் பெண்கள் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு கல்வி மட்டுமே முக்கியத்துவமாகும்.*

**பார்வை நூல்கள்**


1. சாராகாம்பிள், டோரில்மோய், ராஜ்கௌதமன், பெண்ணியம் வரலாறு கோட்பாடுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.
2. தர்மராஜ்.ஜே, எபிஜெம்ஸ்.டி, 2018 பெண்ணியல், டென்சி பதிப்பகம். சிவகாசி, இந்தியா.
3. ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப்பிள்ளை (2004) பெண்ணியம்,அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.
4. ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப்பிள்ளை (2004) பெண்ணியம்,அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.
5. பாரதிதாசன், இசையமுது, உரிமை பதிப்பகம், பாரதசக்தி நிலையம், புதுவை
6. பாமா, கருக்கு, காலச்சுவடு பதிப்பகம்.
7. ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப்பிள்ளை (2004) பெண்ணியம்,அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
8. பேரா.சு.சண்முகசுந்தரம், பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு 1, காவ்யா பதிப்பகம்.
9. புலியூர்க்வகசிகன், திருக்குறள் மதன்றல் நினையம், சிதம்பரம்.
10. பாரதிதாசன், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு, பாரதிதாசன் பதிப்பகம், 1950 புதுச்சேரி.
11. பாமா, கருக்கு, காலச்சுவடு பதிப்பகம்.